# சுகாதார நடைமுறைகள்

## 1



**உங்களுக்கு உடல் நலமில்லை**

- மருத்துவரைப் பாருங்கள். கிருமித்தொற்று உறுதிசெய்யப்பட்டால், உங்களை வீட்டில் தனிமைப்படுத்திக்கொள்ளுங்கள்
- குணமடைதல் நடைமுறை குறித்து சுகாதார அமைச்சு உங்களைத் தொடர்புகொள்ளும்

**வீட்டில் குணமடைதல் திட்டம் நிறைவு**

- முழுமையாகத் தடுப்பூசி போட்டுக்கொண்டோருக்கு 10 நாட்கள்
- முழுமையாக/ முற்றிலும் தடுப்பூசி போடாதோருக்கு 14 நாட்கள்

வீட்டில் குணமடைதல் திட்டம் நிறைவுபெறும்போது, TT சாதனத்தின் எச்சரிக்கை தானாக நீக்கப்படும்

## 2




**நீங்கள் உடல் நலமாக இருக்கிறீர்கள்; ஆனால், கிருமித்தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது**

- முதல் 72 மணி நேரம்: உங்களை வீட்டில் தனிமைப்படுத்திக்கொள்ளுங்கள்
- பின்னர், ஏண்டிஜன் விரைவுப் பரிசோதனையை மேற்கொள்ளுங்கள். ‘கிருமித்தொற்று இல்லை’ என உறுதியானால், தனிமைப்படுத்திக்கொள்வதை நிறுத்திக்கொள்ளுங்கள்
- உடல் நலமில்லையெனில், எ.கா. காய்ச்சல், இருமல், தொண்டைப்புண், பார்க்கவும் 1



## 3



**கிருமித்தொற்றால் பாதிக்கப்பட்ட ஒருவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர் எனச் சுகாதார அமைச்சால் அடையாளம் காணப்படுகிறீர்கள்**

- முதல் நாளன்று, ஏண்டிஜன் விரைவுப் பரிசோதனையை மேற்கொள்ளுங்கள்; **go.gov.sg/agsubmit** எனும் இணையப்பக்கத்தில் பரிசோதனை முடிவுகளைப் பதிவேற்றம் செய்யுங்கள்
- அடுத்த 6 நாட்களுக்கு, வெளியே செல்லும் முன்னர், ஏண்டிஜன் விரைவுப் பரிசோதனையை மேற்கொள்ளுங்கள். பரிசோதனையில் ‘கிருமித்தொற்று இல்லை’ என உறுதியானால் மட்டுமே வெளியில் செல்லுங்கள்
- 7ஆம் நாளுக்குப் பிறகு, ‘கிருமித்தொற்று இல்லை’ என உறுதியானால், மேற்படி பரிசோதனை தேவையில்லை
- ஏண்டிஜன் விரைவுப் பரிசோதனையில் கிருமித்தொற்று இருப்பது உறுதியானால், 2 பார்க்கவும்